[முற்பகல் 9-30]

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தின் மூலம் கடன் பெற்ற நிறுவனங்கள் கடனை திருப்பிச் செலுத்துவதில் என்ன சிக்கல் இருக்கிறது? கடன் பெற்ற நிறுவனங்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

உதகமண்டலத்தில் மாவட்ட தொழில் மையத்திற்கான கட்டிடம் கட்டும் திட்டம்

*வினா எண். 284—திரு. கே. உச்சி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த உதகமண்டலத்தில் மாவட்ட தொழில் மையத்திற்கான கட்டிடம் கட்டும் பணி எப்போது முடியும்?

(ஆ) அங்கு எந்தெந்த உபபொருட்கள் தயாரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தற்பொழுது கோயம்புத்தூர் மாவட்டத் தொழில் மையம் நீலகிரி மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளை கவனித்து வருகிறது. ஆகவே தொழில் மையத்திற்கான கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தில் கலர் பிலிம் தயாரிக்கும் பிரிவு அங்கே இல்லை என்ற நிலை ஏற்படும்போது, அதை மீண்டும் ஏற்படுத்தவேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்றும், அதற்கான உப பொருள்களை அங்கே தயாரிக்க அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இது ஏற்கனவே விவாதிக்கப்பட்ட பிரச்னை. ஆனால், ஏற்கனவே இருக்கின்ற இந்துஸ்தான் புகைப்பட பிலிம் நிறுவனத்திற்கு அருகே ஒரு துணை தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு, அதை விரைவிலே அங்கே தொடங்கயிருக்கிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதன் காரணமாக 10 தொழிற்கூடங்கள் அங்கே அமைய இருக்கின்றன. ஏற்கனவே இருக்கின்ற தொழிலுக்கு, அவைகள் துணைத் தொழிற்கூடங்களாக அமையும்.

1983 பிப்ரவரி 15]

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தை தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக கருதி, இந்த அரசு நீலகிரி மாவட்டத்திற்கென தனியாக ஒரு தொழில் சென்டரை ஏற்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தனியாக தொழில் மையத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பை அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது. அது விரைவில் அமைக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலம் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையில் கலர் பிலிம் பிரிவு நிச்சயமாக அமைக்கப்படும் என்று பிரதமர் அவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியின் சில தலைவர்களிடம் வாக்குறுதி கொடுத்ததாக பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது. அத்தகைய வாக்குறுதியை பிரதம மந்திரி அவர்களிடமிருந்து தமிழக அமைச்சர் பெற முடியவில்லையா? அல்லது இந்திரா காங்கிரஸ் கட்சியினர் சென்றால்தான் அந்த வாக்குறுதி அளிக்கப்படுமா? இதற்கு அமைச்சர் அவர்கள், இந்தத் தொழில் அங்கே அமைக்கவேண்டும் என்று பிரதம மந்திரி அவர்களைச் சந்தித்தார்களா? அவர் அப்போது என்ன பதில் சொன்னார் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, இதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

வேதாரண்யம் திருக்கோயிலுக்கான அறங்காவலர்

*வினா எண் 285—திரு. எம். எஸ். மாணிக்கம் : திரு. என். பழனிவேல், திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் திருக்கோயிலுக்கு, இலங்கையைச் சேர்ந்தவர் பரம்பரை அறங்காவலராக இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதை மாற்றி பரம்பரையில்லாத அறங்காவலர்களை அரசு நியமனம் செய்யும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) அருள்மிகு வேதாரண்யேஸ்வரசுவாமி ஆலயத்திற்கு தவத்திரு ச. கதிர்காம பண்டார சந்நிதி என்பவர் தற்போது பரம்பரை அறங்காவலராய் உள்ளார். அவர் இலங்கைத் தமிழராவார். அவர் இந்தியாவில் வசிக்க அரசாங்கத்தில் அவ்வப்போது அனுமதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS